Registered as a News Paper in Sri Lanka; பக்கங்கள் 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 ஏப்ரல் ( 28 - 04 - 1991 ) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 69

## ஒருவீத வாக்குப் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராக கணபதிப்பிள்ளை சிறினிவாசன் பதவிப் பிரமாணம் எடுத்துள்ளார். கணபதிப்பிள்ளை சிறினிவாசன் 1989 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிட்டு 5919 வாக்குகளைப் பெற்றவர். யாழ். மாவட்டத்தில் 5,92,210 பதிவு செய்யப்பட்ட வாசகாளர் [4ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து

# தீவுப்பகுதி மக்கள் வெளியேற்றம்

(நமது நிருபா)

ஊர்காவற்றுறை இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான தீவுப்பகுதி மக்கள் தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறி குடாநாட்டிற்குள் அகதிகளாக வந்துகொண்டிருக்கின்றனர்.

நேற்றுக் காலை ஆறுமணியளவில் ஊர்காவற்றுறைமுகாமிலிருந்து ஆறு வாகனங்களுடன்வெளியேறிய இராணுவத்தினர் சுருவில் வீதியாலும், சின்னமுளாய் வடக்கு வீதியாலும் நகர்ந்து புளியங்கூடல் சந்திப்பகுதிககு வந்துள்ளனர்.

நேற்றுமாலை வரையில் இவர்கள் புளியங்கூடல் சந்தியிலிருந்து நூறுயாருக்கு அப்பால் தரித்துநிற்கின்றனர்.

இதேவேளைநேற்றுக்காலையிலிருந்து வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் பண்ணை வழியாக குடாநாட்டிற்குள் வந்தவண்ணம் உள்ளனர்.

அகதிகளாக வெளியேறி குடாநாட்டிற்குள் வந்த மக்களில் ஒருபகுதியினர் சென் ஜேம்ஸ் கல்லூரி, சென் சார்ள்ஸ் கல்லூரி ஆகியவற்றிலும், வேறு நகரை அண்டிய பாடசாலைகளிலும் தங்கவைக்கப் பட்டுள்ளனர். ஒருபகுதி மக்கள் உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

## அதிர்ச்சியால் முதியவர் மரணம்

(வேலணை)

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் குண்டுத் தாக்குதலினால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக வயோதிபர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இராணுவத்தினர் தாக்குதல் நடாத்தியபோது பீதியடைந்த வேலணையைச் சேர்ந்த செல்லத்துரை (வயது 75) என்பவர் வீட்டைவிட்டு வெளியேறி வந்துகொண்டிருக்கையில் திடீரென வீதியோரத்தில் வீழ்ந்து மரணமடைந்துள்ளார். (*)

## இயக்குனர்கள் பணியாளர்கள் சமுகம் தரவும்

இடம் பெயர்ந்த ஊர்காவற்றுறை. வேலணை, புங்குடுதீவு பலநோ கூ சங்கங்களின இயக்குனர்கள், பணியாளர்கள் அனைவரையும் இன்று ஞாயிறு முற்பகல் 9 மணிக்கு யாழ் பலநோ. கூ. சங்க தலைமைக் காரியாலயத்திற்கு வருகை தருமாறு யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளார்கள்.

## நாளை இறுதிப் போட்டிகள்

(யாழ்ப்பணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனம் மேதினத்தை முன்னிட்டு நடாத்திவரும் போட்டிகளின் மாவட்ட ரீதியிலான இறுதிப் போட்டிகள் நாளை 29 ஆம் கா திங்கட்கிழமையன்று நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிமைதானத்தில் காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டி நிகழ்ச்சிகளைப் பார்வையிட அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

## இரண்டு புளொட் பலி

(வவுனியா)

தாண்டிக்குளம் இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாண வீதியில் முன்னூறுயார் முன்னுக்கு வந்து பொதுமக்களைப் பரிசோதனை செய்து கொண்டிருந்த புளொட்டினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் புளொட் உறுப்பினர் ரவி உட்பட இரு உறுப்பினர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் பன்னிரண்டு நாற்பத்தைந்து மணியளவில் இடம் பெற்றது.

அதேவேளை முகாமிலிருந்து வெளியேறமுற்பட்ட இரா (4ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரண நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து வருவதால் சகல பகுதிகளிலும் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்கள் உடனடியாகத் தீவுப் பகுதி மக்கள் வந்துசேர்கின்ற பண்ணை, அராலித் துறையை அண்டிய பகுதிகளில் முகாம்களை அமைத்து நிவாரண ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

தீவுப் பகுதியிலிருந்து வந்தடையும் மக்கள் இருப்பிட (4ஆம் பக்கம் பார்கக)

# இராணுவத்துடன் புலிகள் ஆனையிறவில் கடும்மோதல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை விமானங்களின் உதவியுடன் ஆனையிறவிலிருந்து பரந்தன் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பலமணிநேரம் தொடர்ச்சியான மோதல் நடைபெற்று வருகின்றது.

நேற்றுஅதிகாலை 5 30மணியளவில் ஆனையிறவு முகாமில் இருந்து பரந்தன பகுதியை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரை முகாமிலிருந்து நூறு மீற்றர் (4ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதலால் ஐந்து பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை இராணுவ முகாம், பீரங்கிப்படகு ஆகியவற்றிலிருந்து மக்கள் குடியிருப்புகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல், பீரங்கித் தாக்குதல்களினால் ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றைய தினம் முழுவதும் நாரந்தனை, சுருவில, சரவணைப் பகுதிகளை நோக்கி மேற் கொள்ளப்பட்ட இந்த தாக்குதல்களினால் கனகலிங்கம் கனகாம்பிகை (வயது 30 வேலணை) க. ஏகாம்பிகை, (வயது 32 வேலணை), என். இன்பக்கிளி (வயது 45 சர (4ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு முகாமுக்கு விமானம் மூலம் பொதிகள்

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவ முகாமுக்கு நேற்று முன்தினம் அவ்ரோ விமானம் ஒன்று 36 பார்சல்களை இருதடவைகளாக வீசியது. இதன்பின்னர் அவ்ரோ விமானம் இயக்கச்சிப் பகுதியில் பீப்பாக்குண்டு ஒன்றைவீசியது. இதனால் ஏற்பட்ட சேதவிபரம் கிடைக்கவில்லை.

## இராணுவத்தின் சூட்டிற்கு மூன்று பொதுமக்கள் பலி

(வவுனியா)

தாண்டிக்குள இராணுவ முகாமில இருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினர் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர்

இச்சம்பவம் நேற்றுமாலை (4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மே தினத்தில் கலந்து கொள்ள மாட்டேன்

### -இந்தியத் தூதுவர் ஜா

(கொழும்பு)

புலிகளின் மேதின விழாவில் தான் பங்குகொள்ள யாழ்ப்பாணம் போகப்போவதில்லை என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் என்.என். ஜா வீரகேசரிக்குக் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட கடிதத்தலைப்பில் விடுதலைப்புலிகள் மக்கள் முன் (4ஆம் பக்கம் பார்க்க)

# 12 தமிழர் வெட்டிக் கொலை மூவர் கைது; வீடுகள் தீக்கிரை

(திருக்கோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமையன்று கட்டைபறிச்சான் இராணுவமுகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் பன்னிரண்டு தமிழ்ப்பொதுமக்களைச் சுட்டுக்கொன்றுள்ளனர். மூன்று பொதுமக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஒன்பது வீடுகளை தீயிட்டுக்கொளுத்தினர்.

கடந்த வியாழக்கிழமையன்று திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கட்டைபறிச்சான் இராணுவமுகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் கடற்கரைச்சேனை, சம்பூர், பள்ளவெளி, இலக்கந்தை, சூடைக்குடா, சாளையூர் ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்தனர்

இச் சுற்றிவளைப்பின் போது நல்லதம்பி பவாநந்தன் (வயது 20, சம்பூர்) லிங்கராசா பரணீதரன் (வயது16, சம்பூர்), செல்லப்பா கந்தப்பு (வயது 50, சாளையூர்) கதிர்காமத்தம்பி (வயது 50 சாளை (4ஆம் பக்கம் பார்க்க)

## இரு தமிழர் கைது

(திருகோணமலை)

திருக்கோணமலை மாவட்டதில உள்ள 58 ஆம் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பொதுமக்களை தோப்பூர் இராணுவமுகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

## தாடி வளர்ப்பதற்கான தடை

## முஸ்லிம்கள்இராணுவத்தில் சேரத் தடையாகவுள்ளது

### - அபூபக்கர்எம்.பி.

(கொழும்பு)

முஸ்லிம் இளைஞர்கள் ஆயிரக்கணக்கில இராணுவத்தில் சேரத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சேரமுடியாதபடி சில தடைகள் உள்ளன. அத்தடைகளை ஜனாதிபதி அகற்ற வேண்டும் என எஸ். எஸ் எம். அபூபக் (4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறி விட்டது

நுணாவில்மேற்கைச்சேர்ந்த கதிர்காமு-குமாரசாமி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இலக்கம் 44336287V) சொறபபணமும் C.T.ஃ அடையாள அட்டையும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் க.குமாரசாமி நுணாவில்மேற்கு, சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (B/2433)

### விபரங்களுடன் வரவும்

மருதனாமட கோட்டத்துக்கான ஆசிரியர்கள் மற்றும் தளபாடம், கட்டடம் போனறவற்றின் பற்றாக்குறைபற்றிய சகல விபரங்களுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கோட்ட அலுவலகத்திற்கு வரும்படி கோட்டக் கல்வி அதிகாரி கேட்டுள்ளார்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
த. கைலைநாதன்
(இரஞ்சன்)

மண்ணில்: 02-12-971
விண்ணில்: 20-04-'8'
திதி: 28 - 04 - 91
(இன்று நடைபெறும்)

கல்வியிலே கலைமகனாய் விளையாட்டிலே வித்தகனாய், மண் மீட்கும் பணியிலே மனம் தளரா லட்சியனாய் வீறு கொண்ட மகனாய் ஊர் போற்றும் உத்தமனாய் மோகததமிழில் தாகம் கொண்டு வேகமாய் உயிரைப் போக்கிய கைலை நாதா! ஆண்டிரண்டு சென்றாலும் உன் நினைவால் தினமும் துயருறும்;

தந்தை, தாய்,
சகோதரர்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

மா. தங்கவேல் பத்தர்
(சாஸ்திரியார்)
சுவாமிபுரம்
நாவற்குழி
கைதடி.

(R- 1358)

## ஒய்வூதிய வவுச்சர்கள் ஊரடங்கால் பாதிப்பு

யாழ் மாவட்டத்தில் உள்ள ஒய்வூதிய தாரருக்கான மாாச்பாத வவுச்சாகள் இப்பொழுது அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன என யாழ் செயலக ஒய்வூதிய பிரிவிலிருந்து தெரிவிக்கபபட்டுள்ளது. அரசின் ஊரடங்குச் சட்டத்தால் கடந்த இரண்டு நாட்களாக இந்த ஒய்வூதியம் எழுதுவதற்கான ஊழியர்கள் அலுவலகத்திற்கு சமுகம் தராது போனதால் இந்தவவுச்சர்கள் அனுப்பி வைக்கும் வேலை இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் செயலக ஒய்வூதிய கிளையில் கூறப்பட்டது. (லோ)

## நீங்கா நினைவஞ்சலி 3ஆம் ஆண்டு



வீரவேங்கை

### கப்டன் நரேன்

(நல்லநாதன் ஜனார்த்தனன்)

| பிரம் பேணியநாள் | வீரம் பேணியநாள் |
|---|---|
| 24- 11- 1963 | 28- 4- 1988 |

ஆண்டு மூன்றே மறந்தாலும் அன்பே செல்வப் பொன்னிலவே
தூண்டாமணிச் செஞ்சுடர்விளக்கே துரையே வீரத் தளபதியே
கூண்டின் கிளியே பறந்தாயே குருதிக் களத்தில் மறைந்தாயே
ஈண்டுன் நினைவே கனவாக இரவும் பகலும் துடிக்கின்றோம்
பிறந்தே வளர்ந்த தாய்மண்ணைப் பிரிந்தே விதியின் விளையாட்டால்
பறந்தே உலகில் அலைந்தாலும் பத்தரை மாற்றுப் பசும் பொன்னே
மறந்தே போகோம் தவச்சொத்தை மாணிக்கத்தை மறபபோமா
திறம்பா நெஞ்சத்தியாகத்தின் திரவியமாயுனைப் போற்றிடுவோம்

பெரும் அன்பால் உருகும்;
அப்பா, அம்மா, சகோதரர்
மாமா, மாமி
உற்றார், உறவினர்.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(R1353)

## யூனிவேர்சல்

### பழைய மாணவர் கலந்துரையாடல்

எமது கல்வி நிறுவனத்தின் பழைய மாணவ, மாணவிகள் வருகின்ற 29-04-91 (திங்கள்) பி. பகல் 4-30 மணிக்கு நிறுவனத்தில் நடைபெறும் பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளவும்.

நிர்வாக இயக்குனர்
யூனிவேர்சல்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(R- 2427)

## 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



### லெப். இன்பம்

(இ. ஜெகசீலகிருஷ்ணன்)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 21- 7- 1968 | 20- 4- 1989 |

1989ஆம் ஆண்டு தேச விரோதக் கும்பலுடன் சேர்ந்து வந்த இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த லெப். இன்பம் அவர்களுக்கு எமது வீர அஞ்சலிகள்.

தொடர்கிறோம் உன் இலட்சியப் பாதையில்

–குடும்பத்தினர்
சிற்றூரவையினர்
வண்ணார்பண்ணை மக்கள்.

(B-2418)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 04 - 28

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் கந்தளாயில் முஸ்லிம் ஊர்காவல் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரமரணமடைந்த

**கப்டன் குட்டி/தினேஸ்**
(முகம்மது ஹசன் - கந்தளாய்)

1988ஆம் ஆண்டு வெள்ளாங்குளத்தில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமடைந்த

**கப்டன் நரேன்**
(நல்லநாதன் ஜனார்த்தனன் - யாழ்ப்பாணம்)

ஆகியோரை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்

இனிமேல் இனிமேல்
எங்கள் கைகள்
ஒன்றாய் சேர்ந்தே உயரும்!
உயரும் கைகள்
உலகப பந்தில் - தமிழ்
ஈழப்படத்தை எழுதும்
எழுதும் வரையில்
உறக்கம் எங்கள்
உறவை விட்டே பிரியும்
நீங்கள்!
காவித் திரிந்த கனவுகளை
காவிய மாக்கிட
களத்தினில் நாங்கள்!!

– விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 2339)

## சாயி அக்குபங்சர் சிகிச்சை நிலையம்

வாதம்
ஆஸ்த்மா
மூட்டுக்காய்ச்சல்
நீண்டநாள் மனநோய்கள்
மற்றும்
மாற்றமுடியாது எனக் கணிக்கப்பட்ட நீண்ட நாட்கள் கொண்ட
எந்த வகையான நோய்களாக இருந்தாலும்
''வர்மானிய அலகு முறைச் சிகிச்சை''
எனப்படும் தமிழ் அக்குபங்சர் சிகிச்சை மூலம் சிகிச்சையளிக்கப்படும்

**வைத்திய கலாநிதி V. P. சுந்தரராஜன்**
(விசேட அக்குபங்சர் சிகிச்சை நிபுணர்)
இல: 10 பருத்தித்துறை வீதி, யாழ்நகர்.

குறிப்பு: முழுக்க முழுக்க தமிழ் முறையிலும் அதி நவீன முறையிலும் சிகிச்சை அளிக்கப்படும்.

(B-2129)

## ❋ சிந்தனைக்கு ❋

சில வேளைகளில். உன்னதமான வெற்றியைப் போலவே, உத்தமமான தோல்வியாலும் உலகுக்கு உருவான நன்மை ஏற்படும்.

— -எட்வர்ட் டௌடன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 28-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம் :2208
த.பெ.எண்: 05


# தோற்றவர்களுக்குள் உடன்பாடு

ஈராக்கிய தலைவர் சதாம் ஹுசைனுக்கும் குர்திஷ் இனத்தலைவர் ஜலால் ஹர்பானிக்கும் இடையில் ஏற்பட்ட பேச்சுவார்த்தையில் கொள்கை அளவில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பேச்சுவார்த்தையில் குர்திஷ் இன மக்களின் 'சுயாட்சியை'' ஈராக் அங்கீகரிக்கும் அதேவேளை, குர்திஷ் இனத்தவர்கள் ஈராக்கிய தேசிய நீரோட்டத்தில் கலந்துகொள்வதோடு அந்நிய இராணுவத்தினர் நாட்டை விட்டு வெளியேறக் கோர வேண்டும் என்பதும் அடிப்படை அம்சங்களாகும்.

ஈராக்கிய அதிபருக்கும் குர்திஷ் இனத் தலைவருக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கமானது இருவரும் தோல்வியின் மத்தியில் செய்துகொண்ட சமரசமாகும். வளைகுடாப் போரில் தோல்வி கண்ட சதாம் ஹுசைன் தொடர்ந்தும் நாட்டில் நெருக்கடி நிலையையும், வெளியார் அழுத்தங்களையும் தாங்கிக்கொள்ள முடியாத நிலையிலும், குர்திஷ் இனத்தலைவர் அந்நியரை நம்பி தமது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை உணர்ந்த நிலையிலும் இப்பேச்சுவார்த்தையில் பங்குபற்றி இணக்கத்திற்கு வந்துள்ளனர். அதாவது இருவரின் நோக்கங்கள் வேறு. ஆனால் தேவை ஒன்று. இதுவே சமரச ஒப்பந்தத்திற்கான இணக்கம்.

குர்திஷ் இனத் தலைவருக்கும் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனுக்கும் இடையில் ஏற்பட்ட இந்தத் திடீர் இணக்கம் இப்பிரச்சினையில தலையிட்டு தமக்கு சாதகமான நிலைமைகளை உருவாக்க முயற்சித்துக் கொண்டிருந்த ஈராக்கின் அண்டை நாடுகளும் மேற்குலக நாடுகளும் எதிர்பாராத அரசியல் திருப்பமாக அமைந்துள்ளதோடு பலத்த ஏமாற்றம் அளிக்கும் விடயமாகவும் அமைந்துள்ளது என்பது மட்டும் உண்மை.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் இந்த இணக்கம் பற்றிச் சந்தேகமும் அதிருப்தியும் தெரிவித்துள்ளனர். 'உதவிக்கென்று' சென்றவர்களே உதவி பெற்றவர்களே வெளியே போ என்ற நிலை உருவாவதை அவரால் ஏற்றுக் கொள்ளமுடியாது அவ்வாறு ஏற்படுவது அமெரிக்காவிற்கு முகத்தில் அறைந்தது போன்ற ஒரு திருப்தியை சதாம் ஹுசைனுக்குத் திட்டவட்டமாகக் கொடுக்கும்.

துருக்கியைப் பொறுத்து ஈராக்-குர்திஷ் இனத் தலைவருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கமானது எந்தளவிற்கு குர்திஷ் இனத்தவருக்கு சுயாட்சியை வழங்குகின்றது என்பது பற்றிய கவலையாகும். ஏனெனில் ஈராக்கில் குர்திஷ் இனத்தவருக்கு வழங்கப்படும் சுயாட்சியை துருக்கியில் உள்ள குர்திஷ் இனத்தவரும் கோரக் கூடும் இதற்கு ஈராக்கிய குர்திஷ் இனத்தவர் மட்டுமல்ல; ஈராக்கிய அரேபியரே ஆதரவு கொடுக்கவும் கூடும். இதன் காரணமாக துருக்கிக்குள் நெருக்கடிகள் உருவாகக் கூடும்.

ஈரானைப் பொறுத்து தமது ஆதரவு பெறும் ஷியா முஸ்லிம்களின் போராட்டம் நசுக்கப்பட்டு விடும் என்பதோடு ஈரானில் உள்ள குர்திஷ் மக்களின் சுயாட்சி சம்பந்தமான நெருக்கடியும் ஈரான் அரசுக்குத் தோன்றக்கூடும்.

அதேவேளை, குர்திஷ் இனத்தலைவர் பிரச்சினைக்கு தீர்வு காண முன்வந்திருப்பது சதாம்ஹுசைனைப் பொறுத்து பெரும் ஆறுதல் அளிக்கும் விடயம் ஆகும். இதனை சதாம்ஹுசைனுக்குக் கிடைத்த வெற்றி என்று கூறினாலும் மிகையாகாது. குர்திஷ் இனத்தலைவருடன் இணக்கம் காண்பதன் மூலம் இரு பெரும் பிரச்சினைகளுக்கு இராஜதந்திர வெற்றியை சதாம்ஹுசைன் எதிர்பார்க்கின்றார்.

முதலாவது அந்நியப்படைகள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்ற அழுத்தத்தை அவர்களுக்கு ஏற்படுத்துதல். இரண்டாவது ஈரானிய ஆதரவு ஷியா முஸ்லிம்களின் கிளர்ச்சியைத் தொடர்ந்து நசுக்குவதில் வெற்றி காணுதல்

குர்திஷ் இனத்தலைவர்களுக்கு விட்டுக்கொடுப்புகளை செய்வதன் மூலம் பெரும் நெருக்கடிகள் இழப்புகள் ஈராக் அதிபருக்கு ஏற்படப் போவதில்லை. ஏனெனில் இவர்கள் சிறுபான்மையினர். அதேவேளை, ஷியா முஸ்லிம்களை அடக்குவதும், ஓரம் கட்டுவதும், அதன் மூலம் ஈரானின் செயற்பாடுகளைக் கட்டுப்பண்ணுவதும் தனது பதவியை நீடிப்பதற்கும், நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கும் சதாம்ஹுசைனுக்கு மிகவும் அவசியமாகின்றது. ஏனெனில் அவர்கள் ஏறத்தாழ நாட்டில் அரைவாசி (50வீதம்) மக்கள் தொகையினர்.

இந்நிலையில், சதாம்ஹுசைனுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் குர்திஷ் தரப்பினருக்கு சில சாதகமான வாய்ப்புக்கள் உள்ளன என்பது மறுக்கப்பட முடியாதது தான். ஆனால், நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு குர்திஷ் மக்களைப் பயன்படுத்திவிட்டு பின்னர் தட்டிக்கழிப்பதற்கு ஈராக் தலைமை முயலாது என்றும் கூறுவதற்கில்லை ஆகையால் குர்திஷ் தலைமை அவதானமாக இருக்க வேண்டும் என்பது மட்டும் அவசியம்.

# அரச திணைக்களங்களில் கணக்காளர் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச திணைக்களங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள், யாழ். செயலகம், பல்கலைக் கழகம், பனைவள அபிவிருத்திச் சபை ஆகிய அனைத்தினதும் கணக்கு ஆய்வுகளையும் செய்வதற்கு மூன்றே மூன்று கணக்கு ஆய்வாளர்களே உள்ளனர்.

சாதாரணமாக இந்தக் கணக்கு அறிக்கைகளை ஆய்வு செய்வதுபோல் அல்லாமல் மேலோட்டமாகவே தற்பொழுது ஆய்வு செய்து வர வேண்டிய நிலை உள்ளது என பிரதம கணக்காய்வாளர் எஸ். சண்முகம் கூறியுள்ளார்.

யாழ். செயலகத்தில் அலுவலகத்தைக் கொண்டுள்ள இக்கணக்காய்வாளர் கூறுகையில் முன்பு யாழ் பல்கலைக் கழகத்தினது கணக்குகளையும். பனை வள அபிவிருத்திச்சபையின் கணக்குகளையும் மட்டுமே கணக்காய்வு செய்து வந்தோம். ஆனால் இப்பொழுது யாழ். செயலகம் உட்பட யாழ். மாவட்டத்தின் அனைத்து திணைக்கள கணக்குகளும் சேர்ந்து பல்கலைக்கழக உதவி அரசாங்க அதிபர் பணிமனைக் கணக்குகளும் பனைவள அபிவிருத்திச்சபை கணக்குகளும் ஆய்வு செய்யும்படி அதிகாரம் தரப்பட்டுள்ளது. ஆனால் மேலதிக வேலைகள் தரப்பட்டதற்கு ஏற்ப மேலதிக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படவில்லை என்று கூறினார்.

இதே நிலையே யாழ். மாவட்ட உள்ளூராட்சி சேவையிலும் நடைபெறுகிறது. உள்ளூராட்சிப் பிரிவு கணக்கு ஆய்வுக்கு பொறுப்பான என். சதாநந்தன் என்ற கணக்காய்வாளரே யாழ். மாநகரசபை, சாவகச்சேரி பருத்தித்துறை வல்வெட்டித்துறை நகரசபை ஆகியவையுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச சபைகளினதும் கணக்குகள் ஆய்வு செய்யவேண்டிய நிலை உள்ளது. ஆனால் அவருடன் இருப்பது மேலும் மூன்று உத்தியோகஸ்தர்களே என்று கச்சேரியில் உள்ள கணக்காய்வாளர் சண்முகம் கூறினார். (லோ)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்.மாவட்டசி.க.கூ.ச. சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1991 சித்திரை மாதம் இன்று முற்பகல் 9.00 மணிக்கு யாழ் இந்து மகளிர் ஆரம்பபாடசாலையில் நடைபெறும்.

முன்னர் வைத்தீஸ்வரா வித்தியாசாலையில் இக் கூட்டம் நடாத்த ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. தற்போது நடைபெறும் க.பொ.த.உயர் தரப் பரீட்சை காரணமாக இந்த இடமாற்றம் செய்யப் பட்டுள்ளது.

# தென்மராட்சி தொழிலாளர் மேதின முடிவுகள்

(சொடிகாமம்)

மே தினத்தை முன்னிட்டு தென்மராட்சி தொழிலாளர்களை கௌரவிக்கும் முகமாக தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

பதநீர் வடித்தல் போட்டியில் இந்திரன் (வரணி) என்பவர் முதலாம் நிலையிலும், செ. இந்திரன் (சாவகச்சேரி) என்பவா இரண்டாம் நிலையிலும், சு. யோகரத்தினம் (வரணி) என்பவர் மூன்றாம் நிலையிலும் வந்தனர்.

குட்டான் இழைத்தல் போட்டியில் செல்வி சி. சசிகலா (கொடிகாமம்) முதலாம் நிலையிலும், செல்வி க. தர்மஞானேஸ்வரி (வரணி) இரண்டாம் நிலையிலும், செல்வி க. தர்மஜெகதீஸ்வரி மூன்றாம் நிலையிலும் வந்தனர்.

கிடுகு இழைத்தல் போட்டியில் செல்வி சு. நாகேஸ்வரி (சாவகச்சேரி) முதலாம் நிலையிலும், செல்வி மா. மணிமேகலை (கொடிகாமம்) இரண்டாம் நிலையிலும், திருமதி மாக்கிரட். (பளை) மூன்றாம் நிலையிலும் வந்தனர்.

தடிவிளக்குமாறு செய்தல் போட்டியில செல்வன் சத்தியரூபன் (கொடிகாமம்) முதலாம் நிலையிலும், வி. சண்முகராசா (கொடிகாமம்) இரண்டாம் நிலையிலும், இ. ராசேஸ்வரன் (வரணி) மூன்றாம் நிலையிலும் வந்தனர்.

தும்புத்தடி செய்தல் போட்டியில் சி. தவராசா (வரணி) முதலாம் நிலையில் வந்தார்.

நிலம் பண்படுத்தல் ஆண்கள் போட்டியில் அருளப்பு (பளை) முதலாம் நிலையிலும், அ. இராசரத்தினம் (மிருசுவில்) இரண்டாம் நிலையிலும், வே. ஞானப்பிரகாசம் (பளை) மூன்றாம் நிலையிலும் வந்தனர்

நிலம பண்படுத்தல் பெண்கள் போட்டியில் ச. ராஜேஸ்வரி (கெற்பெலி) முதலாம் நிலையிலும், கு.சுமதி (வரணி) இரண்டாம் நிலையிலும் கு. வசந்தா (வரணி) மூன்றாம் நிலையிலும் வந்தனர்.

உழவுப் போட்டியில் சி. நடராசா மிருசுவில்) முதலாம் நிலையிலும், இ. நடேசு (வரணி) இரண்டாம் நிலையிலும், ச. சந்திரன் (பளை) மூன்றாம் நிலையிலும் வந்தனர்.

துலாமிதித்தல் போட்டியில் சோடியாக ஆண்கள் முதலாம் நிலையில் செ. யோகராசாவும் குணசேகரனும், இவர்கள் கொடிகாமத்தைச் சேர்ந்தவர்கள். இரண்டாம் நிலையில் [illegible]. குணசேகரம் நற்குணதேவன் இவர்கள் கைதடியைச் சேர்ந்தவர்கள். மூன்றாம் நிலையில் சி. உதயசேகரம் விஜயானந்தன் இவர்கள் கொடிகாமத்தைச் சேர்ந்தவர்கள்.

துலாமிதித்தல் பெண்கள் சோடியாக நடந்த போட்டியில் முதலாம் நிலையில் செல்வி சி. சசிகலா மணிமேகலை ஆகியோரும், இரண்டாம் நிலையில் வே. புஸ்பலதா, க. தர்மா இவர்கள் வரணியைச் சேர்ந்தவர்கள். மூன்றாம் நிலையை கு. வசந்தா கு.சுமதி ஆகிய வரணியைச் சேர்ந்த பெண்கள் பெற்றனர். (86)

## ஒத்திவைப்பு

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க உடுப்பிட்டி பருத்தித்துறைக் கிளைகளால் இன்று 28-04-1991 ஞாயிற்றுக் கிழமை யாழ். அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடாத்தவிருந்த நிர்வாக சேவை வகுப்பு III போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு வேறொரு திகதிக்குஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

## தமிழகத் தேர்தலில்

# சட்டசபைக்கு 2,500 லோக்சபாவிற்கு 350

(சென்னை)

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இந்தியத் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் நேற்றுப் பிற்பகல் மூன்றுமணியுடன் முடிவடைந்தது.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தொகுதிகளுக்குச் சுமார் 2500 பேரும், லோக்சபைத் தொகுதிகளுக்குச் சுமார் 350 பேரும், வேட்புமனுக்கள் தாக்கல் செய்துள்ளதாகச் சென்னையிலிருந்து கிடைக்கும் உறுதியளிக்கப்படாத செய்திகள்தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டில்தேர்தல்ஒழுங்காக நடப்பதைக் கண்காணிக்கமாநிலப் பார்வையாளர் 78பேரும், மத்திய பார்வையாளர்கள் 13பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## இடம் மாற்றம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டகடல் தொழில் விரிவாக்க அலுவலகம் தற்சமயம் யாழ். செயலகத்தில் உள்ள உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திணைக்களத்திற்கு அருகாமையில் கடந்த 24ந் திகதி (24-4 91) புதன் கிழமை தொடக்கம் செயல்பட்டு வருவதாகப் பதில் மாவட்ட கடல் தொழில் உத்தியோகத்தர் திரு. ந இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். (24)

# இஸ்ரேலுடன் பாரதூரமான கருத்து வேறுபாடு

– ஜேம்ஸ் பேக்கர்

(மாஸ்கோ)

இஸ்ரேலிய அரசாங்கத்துடன் பாரதூரமான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ள போதிலும் தமது சமாதான முயற்சிகளைஇன்னமும் கைவிடவில்லையென அமெரிக்க வெளியுறவு செயலர் ஜேம்ஸ் பேக்கர் கூறியுள்ளார். தமது மாஸ்கோ விஜயத்தை முடித்துக்கொண்டு ஜெருசலேம் திரும்பியுள்ள ஜேம்ஸ் பேக்கர் மேலும் கூறுகையில் மத்திய கிழக்குப் பிரச்சினையில் ஐ.நா தலையிடுவதையோ பாலஸ்தீன விடுதலை இயக்கம் பேச்சுகளில் பங்குபறறுவதையோ இஸ்ரேல் விரும்பவில்லை. ஆனால் சம்பந்தப்பட்ட அரபு நாடுகளுடன் நேரடியாகப் பேசித் தீர்க்க இஸ்ரேல் ஆர்வம் கொண்டுள்ளது. மத்திய கிழக்கு சமாதான முயற்சியில் சோவியத் யூனியனும் கூட்டாக ஈடுபடும் எனவும் தெரிவித்தார்.

## மரணதண்டனை

வவுனியா பேயாடிகூழாங்குளம் பகுதியில், துரோக நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவருக்கு விடுதலைப் புலிகளினால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

மேற்படி பகுதியில் 26 ஆம் திகதி பொதுமக்கள் முன்னிலையில் தங்கராசா புலேந்திரன் என்பவருக்கே மரணதண்டனை வழங்கப்பட்டது (தி)

# தமிழ்நாட்டு தேர்தல் களத்தில் ஒருதொகுதியில் 320வேட்பாளர்

தமிழ்நாட்டிலுள்ள அரவக்குறச்சி சட்டமன்றத் தொகுதிக்கு முன்னூற்று இருபது வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள இருநூற்றிமுப்பத்தி நான்கு சட்ட மன்றத் தொகுதிகளுக்கும் மொத்தம் 4617 வேட்பு மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டுளளன. சிதம்பரனார் மாவட்டததிலுள்ள கோவில்பட்டி சட்டமனறத் தொகுதியில் 102 வயதான சாளியம்மள் எனபவரும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளார்.

தமிழ் நாட்டில்முப்பத்தொன்பது மக்களவைத் தொகுதிகளுக்கு அறுநூற்றி எழுபத்தொரு பேர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர். வேலூர் மக்களவைத் தொகுதிக்கு ஆகக் கூடுதலாக நாற்பத்தொரு பேரும், பெரம்பூர்மக்களவைத் தொகுதிக்கு ஆகக்குறைவாக ஆறு பேரும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்தியவின் மக்களவைக்கும், எட்டு சட்டமன்றங்களுக்கும் நடைபெறவிருக்கும் தேர்தலுக்காகச் சுமார் 32000 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதில் உத்தரப்பிரதேசத்தில் மட்டும் சுமார் 12000 வேட்பு மனுக்கள் தாக்கலாகியுள்ளன. வேட்புமனுக்களின் பரிசீலனை நேற்று இடம்பெற்றது. நாளை வேட்புமனுக்களை மீளப்பெறுவதற்கான இறுதி நாளாகும்.

## பெற்றுக் கொள்ளவும்

சரவணை கிழக்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த செல்வரத்தினம் ஜெயகாந்தன் என்பவரது அடையாள அட்டை ஒரு பேர்சுடன் கண்டெடுக்கப்பட்டு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். இந்த அடையாள அட்டையின் இலக்கம் 692431014V

## ஈராக் குடியரசு காவற்படை கலைப்பு

(பக்தாத்)

ஈராக் அதன் பிரஜைகளை வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அதேவேளை பாத் கட்சி அங்கத்தவர்களைக் கொண்ட ஈராக்கிய குடியரசு காவற்படை அமைப்பு கலைக்கப்படும் என்றும் ஈராக் அரசு அறிவித்துள்ளது. ஈரான்-ஈராக் யுத்தம் இடம்பெற்ற காலத்தின் போது ஈராக் பிரஜைகள் வெளியேறுவதை ஈராக் அரசு தடை செய்திருந்தது. கடந்த ஆண்டின் மத்திய பகுதியில ஈராக்கியர்கள் வெளியேற அரசு அனுமதித்தது எனினும் குவைத் ஆக்கிரமிப்புக்குப் பின் மீண்டும ஈராக்கியர்கள் வெளியேறுவது தடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## நஞ்சருந்தித் தற்கொலை

(அச்சுவேலி)

அச்சுவேலியைச் சேர்ந்த இளம் குடும்பப்பெண் ஒருவர் நேற்று நஞ்சருந்தித் தற்கொலை செய்துள்ளார் சந்திரவதனா (வயது 21) என்ற பெண்ணே தற்கொலை செய்தவராவார்.

## இலவச தடுப்பூசி

(கொழும்புத்துறை)

சுண்டிக்குளிப்பகுதி யாழ் அச்சக வீதியிலுள்ள கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கோழிகளுக்கு இலவசமாக நோய்த் தடுப்பு ஊசி மருந்துஏற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (24)

## ஒருவீத வாக்கு

இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையில் 2,65,058 வாக்காளர் மாத்திரம் தேர்தலின் போது வாக்களித்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் சிறினிவாசன் பதிவு செய்யப்பட்ட மொத்தவாக்குகளில் 1 விகிதமும் வாக்களிக்கப்பட்ட மொத்தவாக்குகளில் 2 விகிதம் வாக்குகளையும் பெற்றுள்ளார்.

பாராளுமன்ற ஜனநாயக நியமனங்களின்படி இவர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட வேட்பாளராவார். ஆனல் தர்மிஷ்ட ஆட்சியில் சிறினிவாசன் பாராளுமன்ற அங்கத்தவராகியுள்ளார்.

## இரண்டு

ணுவத்தினர்மீதுபுலிகள்எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர். அதேவேளை இரு இராணுவத்தினர் புலிகளின்கண்ணி வெடியில் சிக்கி கால்களையும் இழந்தனர்.

## விவசாயிகளுக்கு கடன்

(கொழும்புத்துறை)

இருபாலையில் விவசாயத்தில் ஈடுபட்டு உப உணவுப் பயிர்ச் செய்கையில் தீவிரமாக முன்னின்று செயற்பட்டு வரும் பன்னிரண்டு விவசாயிகளுக்கு இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவு மூவாயிரம் ரூபா வீதம் விவசாயக் கடன் பெற்றுக் கொடுத்துள்ளதாக இருபாலை கிழக்கு சனசமூகநிலையச் செயலாளர் திரு.க.குமாரசாமி தெரிவித்துள்ளார். (24)

## முஸ்லிம்கள்

கர் எம்.பி. பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

முஸ்லிம்கள் சிலவகை இறைச்சி வகைகளைச் சாப்பிடமாட்டார்கள் தாடி வளர்ப்பதை மார்க்கக் கடமையாகக் கருதுவார்கள் எனவே அவற்றிற்கு இடமளிக்கப்பட்டால் நிச்சயம் அவர்கள் படையில் சேர்ந்து நாட்டைக்காப்பாற்றுவார்கள எனவும் கூறினார்

இந்தியாவில்சீக்கியப்படைப் பிரிவில் தாடி வளர்க்கவும், தலைப்பாகை அணியவும் அனுமதி அளிக்கப்படுகிறது இதே விதமாக முஸ்லிம் வாலிபர்களும் தமது மார்க்கத்திற்கு ஏற்ற விதத்தில் செயற்பட ஜனாதிபதி ஏற்பாடு செய்ய வேண்டும என கேட்டுக் கொண்டார் திரு. அபூபக்கர்.

## 12 தமிழர்

யூர்), மாசிலாமணி சதிர்காமததம்பி (வயது 38, சாளையூர்), சந்தையா சுப்பிரமணியம் (வயது 33 சாளையூர்) ஆகியோருட்பட பன்னிரண்டு பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் ஆறுபேர் நயாம்பாட்டு எரிக்கபபட்டதனால் அடையாளம் காணப்பட முடியவில்லை.

இதேவேளை கைது செய்யப்பட்ட பொதுமக்களில் செல்லப்பா காளிக்குட்டி (வயது 75 சளையூர்), கணபதி பிள்ளை சந்திரவேல் (வயது 18, சாளையூர்) சித்திரவேல் கிருபாரந்ர சா (வயது 26, சாளையூர்) அகிய மூவரும் இராணுவத்தினரால் நையப்புடைக்கப்பட்டுள்ளனர் இவர்களில் ஒருவரின நிலை கவலைச்கிடமாக வுள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன் இலக்கந்தை, சூடைக்குடா அகிய பகுதிகளில் பொது மக்களின் ஒன்பது வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இராணுவத்தின்

இடம்பெற்றது. இராணுவத்தினரின் இத்தாக்குதலின் தொடர்ச்சியான நிகழ்வாக சர்வதேச நிவாரண அமைப்பொன்றின் பொருள்களுடன் வந்த லொறிஒன்றும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

## ஷெல்

வணை) கே சரஸ்வதி (வயது 52 சின்னமடு சரவணை) ஆகியோர் காயமடைந்தனர்.

அதேவேளைபடகிற்குள்வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் செபஸ்ரியான் அடைக்கலம் (வயது 65 சுருவில்) படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிககப்பட்டுள்ளார். (ச),(மு)

## நிவாரண

வசதி இல்லாதவிடத்து கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் தொடர்புகொண்டு முகாம்களுக்குச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர். மேலும் பொதுமக்களும், சமூகசேவை அமைப்புகளும்.அனாதரவான மக்களுக்கு ஆதரவுகாட்டும்படியும் மனிதநேய ஸ்தாபனங்களுடனும் ஒத்துழைக்குமாறும் கோரப்பட்டுள்ளனர்.

## புலிகளின்

னணித்தலைவர் கோ. மகேந்திரராசாவினால் கையெழுத்திடப்பட்ட அழைப்புககள் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவரகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன இந்த அழைப்புகள்கிடைத்திருப்பதை தூதரக அதிகாரிகள் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

## இராணுவத்துடன்

தொலைவில் தடுத்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொள்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினரின் இம்முயற்சிக்குதவியாக இரண்டுஹெலி, இரண்டுபொம்மர் ஒருஅவ்ரோ வை-12 ஆகிய விமானங்கள் வானில் வட்டமிட்டு பலத்த குண்டுவீச்சுத் தாக்குதல்களையும், கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டன.

மாலை 6மணிவரை இப்பகுதியில் தொடர்ச்சியாக மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகஅங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதால் சேதவிபரங்கள் அறிய முடியவில்லை. (மு,ச)

## அரசாங்கமே தீர்வை முன்வைக்க வேண்டும் - அஷ்ரப்

(கொழும்பு)

தீர்வு யோசனைத் திட்டத்தை முன்வைக்குமாறு தமிழ்க்கட்சிகள் குழுக்களிடமும் முஸ்லிம் கட்சிகளிடமும் கேட்கப்பட்டது. ஆனால் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் ஏற்புடைய தீர்வுத்திட்டம் ஒன்றை ஏகமனதாக முன்வைககமுடியவில்லை. இணக்கப்பாடொன்றுக்குவர எம்மால் முடியவில்லை. ஆதலால் தீர்வை அரசுதான் முன்வைக்க வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம் அஷ்ரப் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

## பதினைந்து பெண்கள் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம நோக்கிவந்த பதினைந்து பெண்கள் சிறிலங்கா இராணுவத்தின் பெண்கள் அணியினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்தவியாழனன்று தடுத்து வைக்கப்பட்ட இவர்கள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை

இதே நாளன்று தாண்டிக்குளம் இராணுவ முகாமருகே தமிழ் இளைஞர் ஒருவர் நையப்புடைக்கப்பட்டு சட்டி வைக்கப்பட்டார். இதே நாளன்று தாண்டிக்குளம்இராணுவ முகாமருகே இடம்பெற்ற பிறிதொரு சம்பவத்தில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த இளம்பெண் ஒருவரும், இளைஞர் ஒருவரும் இராணுவத்தால் கடுமையாகத் தாககப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலை காவலாளியால்

## ஊழியர்களின் திருட்டு முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் களஞ்சியஅறையை உடைத்து திருட முற்பட்ட இருவர் காவலாளியால் மடக்கிப் பிடிககப்பட்டார்.

நேற்று அதிகாலை2 45மணியளவில் போதனா வைத்தியசாலையின் குசினிக்கு அருகே உள்ள களஞ்சிய அறைக் கதவை உடைத்து மருந்துகளைத் திருடிக் கொண்டிருந்த சுகாதார ஊழியர்களான பரலோகராசா, ஜேசுராசா ஆகிய இருவரையும் காவலாளி மடக்கிப் பிடித்து விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்தார் இவர்கள் தற்போது விடுதலைப்புலிகளினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ச)

## அறுவடைக்குச் செல்ல விவசாயிகள் அச்சம்

(வவுனியா)

வவுனியா மருக்காரம்பளை நீர்ப்பாய்ச்சல் குளத்தின் கீழ் வேளாண்மை செய்யப்பட்டுள்ள சுமார் 30 ஏக்கர் வயல் நிலத்தில் அறுவடைசெய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கினறனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினர் மருக்காரம்பளையை அண்டிய பகுதியில் நிலை கொண்டதை அடுத்து மேற்படி வயல் நிலத்தைக கைவிட வேண்டிய அபாயநிலை எழுந்துள்ளது.

இப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல மேற்கொள்ளப்பட்டு வருவதனாலும், அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெறுவதனாலும், அறுவடை செய்யவேண்டிய காலம் நெருங்கிவிட்டபோதிலும விவசாயிகள் தத்தமது வயல்களுக்குச் செல்வதற்கு அஞ்சுகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கையில் மிகக் குறைந்த விவசாயிகளே ஈடுபட்டனர் என்பதும் குறுகிய ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே நெல் பயிர் செய்யபபட்டது எனபதும் குறிப்பிடததக்கது.

புதுக்குளம், கதிர்காமர்சின்னக்குளம் பகுதியில் இராணுவ நடவடிக்கையின் காரணமாகப் பல ஏக்கர் நிலம் பயிர் பருவத்திலேயே கைவிடப்பட்டமை சுட்டிக் காட்டப்பட வேண்டியது. (தி)

## கவலைக்கிடமான நிலையில் மூதாட்டி ஆஸ்பத்திரியில்

(வவுனியா)

புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் காயமடைந்த மூதாட்டி ஒருவர் கவலைகிடமான நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி புளியங்குளம் பகுதியில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் இடம்பெற்றதில் நான்கு பேர் காயமடைந்தனர்.

தங்கராசா சின்னம்மா (41), இராசையா தங்கராசா (56), ச. கௌரி (20), பிச்சைமுத்து செல்லம்மா (70) ஆகியோரே மேற்படி தாக்குதலில் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பிச்சைமுத்து செல்லம்மா என்னும் மூதாட்டி கவலைக்கிடமான நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (தி)

## பஞ்சாப் தேர்தல்களில் இ. காங்கிரஸ் போட்டியிடாது

(டில்லி)

பஞ்சாப் மாநிலத்திற்கான சட்டப்பேரவை மற்றும் லோக்சபாத் தேர்தல்களில போட்டியிடுவதில்லை என்று இந்திரா காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

பஞ்சாப்பில் தேர்தல் நடைபெற்றால் பிரிவினைவாதிகளும் பயங்கரவாதிகளும் தான் நன்மையடைவார்கள் என்பதால் இதில் போட்டியிடப்போவதில்லை என இந்திரா காங்கிரஸ் அறிவித்துள்ளார்.

இதேவேளை பாரதீய ஜனதாககட்சி தேர்தல் பிரசாரத்தின்போது தனது வேட்பாளர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்பட்டால் தமதுகட்சி அங்குநடைபெறும் தேர்தலில் பங்குபற்றும் என்று தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.